## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-9 - மல்லிகை
**(தலைவி தனது ஆற்றாமையால் வருந்தியதைக் கூறும் பாசுரத்தாலே தமது பிரிவுத் துன்பத்தை ஆழ்வார் தெரிவித்தல்)**

3645 * மல்லிகை கமழ் தென்றல் ஈருமாலோ! *
வண்குறிஞ்சி இசை தவழுமாலோ! *
செல்கதிர் மாலையும் மயக்குமாலோ! *
செக்கர் நல்மேகங்கள் சிதைக்குமாலோ! **
அல்லியந்தாமரைக் கண்ணன் எம்மான் *
ஆயர்களேறு அரியேறு எம் மாயோன் *
புல்லிய முலைகளும் தோளும் கொண்டு *
புகலிடம் அறிகிலம் தமியமாலோ! 1

3646 புகலிடம் அறிகிலம் தமியமாலோ! *
புலம்புறும் அணிதென்றல் ஆம்பலாலோ! *
பகலடு மாலை வண்சாந்தமாலோ! *
பஞ்சமம் முல்லை தண்வாடையாலோ! **
அகலிடம் படைத்திடந்து உண்டுமிழ்ந்து
அளந்து * எங்கும் அளிக்கின்ற ஆயன் மாயோன் *
இகலிடத்தசுரர்கள் கூற்றம் வாரான் *
இனி இருந்து என்னுயிர் காக்குமாறென்? 2

3647 இனி இருந்து என்னுயிர் காக்குமாறென்? *
இணைமுலை நமுக நுண்ணிடை நுடங்க *
துனியிருங்கலவி செய்து ஆகம் தோய்ந்து *
துறந்தெம்மை இட்டகல் கண்ணன் கள்வன் **
தனியிளம் சிங்கம் எம் மாயன் வாரான் *
தாமரைக் கண்ணும் செவ்வாயும் * நீலப்
பனியிரும் குழல்களும் நான்கு தோளும் *
பாவியேன் மனத்தே நின்றீருமாலோ! 3

3648 பாவியேன் மனத்தே நின்றீருமாலோ! *
வாடை தண்வாடை வெவ்வாடையாலோ! *
மேவு தண்மதியம் வெம்மதியமாலோ! *
மென்மலர்ப் பள்ளி வெம்பள்ளியாலோ! **
தூவியம் புள்ளுடைத் தெய்வ வண்டு
துதைந்த * எம் பெண்மையம் பூவிதாலோ! *
ஆவியின் பரமல்ல வகைகளாலோ! *
யாமுடை நெஞ்சமும் துணையன்றாலோ! 4

3649 யாமுடை நெஞ்சமும் துணையன்றாலோ! *

ஆபுகும் மாலையும் ஆகின்றாலோ! *
யாமுடை ஆயன் தன் மனம் கல்லாலோ! *
அவனுடைத் தீங்குழல் ஈருமாலோ! **
யாமுடைத் துணை என்னும் தோழிமாரும் *
எம்மின் முன் அவனுக்கும் ஆய்வராலோ! *
யாமுடை ஆருயிர் காக்குமாறென்? *
அவனுடை அருள் பெறும் போதரிதே 5

3650 அவனுடை அருள் பெறும் போதரிதால் *
அவ்வருள் அல்லன அருளும் அல்ல *
அவனருள் பெறும் அளவு ஆவி நில்லாது *
அடுபகல் மாலையும் நெஞ்சும் காணேன் **
சிவனொடு பிரமன் வண்திருமடந்தை *
சேர் திருவாகம் எம்மாவி ஈரும் *
எவன்[1] இனிப் புகுமிடம்? எவன் செய்கேனோ? *
ஆருக்கென் சொல்லுகேன்? அன்னைமீர்காள்! 6

3651 ஆருக்கென் சொல்லுகேன்? அன்னைமீர்காள்! *
ஆருயிர் அளவன்று இக்கூர்தண்வாடை *
காரொக்கும் மேனி நங்கண்ணன் கள்வம் *
கவர்ந்த அத்தனி நெஞ்சம் அவன் கணஃதே **
சீருற்ற அகிற்புகை யாழ் நரம்பு *
பஞ்சமம் தண்பசுஞ்சாந்து அணைந்து *
போருற்ற வாடை தண்மல்லிகைப்பூப் *
புது மணம் முகந்து கொண்டு எறியுமாலோ! 7

3652 புது மணம் முகந்து கொண்டு எறியுமாலோ! *
பொங்கிள வாடை புன்செக்கராலோ! *
அதுமணந்து அகன்ற நங்கண்ணன் கள்வம் *
கண்ணினிற் கொடிது இனி அதனில் உம்பர் **
மதுமண மல்லிகை மந்தக் கோவை *
வண்பசுஞ் சாந்தினில் பஞ்சமம் வைத்து *
அதுமணந்து இன்னருள் ஆய்ச்சியர்க்கே *
ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் 8

3653 ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் *
அது மொழிந்திடை இடைத்தன் செய்கோலத் *
தூது செய் கண்கள் கொண்டு ஒன்று பேசித் *
தூமொழி இசைகள் கொண்டு ஒன்று நோக்கி **
பேதுறு முகம் செய்து நொந்து நொந்து *
பேதை நெஞ்சறவறப் பாடும் பாட்டை *

---

[1] எவம்

யாதும் ஒன்று அறிகிலம் அம்ம! அம்ம! *
மாலையும் வந்தது மாயன் வாரான் 9

3654 மாலையும் வந்தது மாயன் வாரான் *
மாமணி புலம்ப வல்லேறணைந்த *
கோல நன்னாகுகள் உகளுமாலோ! *
கொடியன குழல்களும் குழறுமாலோ! **
வாலொளி[2] வளர் முல்லை கருமுகைகள் *
மல்லிகை அலம்பி வண்டாலுமாலோ! *
வேலையும் விசும்பில் விண்டலறுமாலோ! *
என் சொல்லி உய்வன் இங்கு அவனை விட்டே? 10

3655 * அவனை விட்டு அகன்று உயிர் ஆற்றகில்லா *
அணியிழை ஆய்ச்சியர் மாலைப் பூசல் *
அவனை விட்டு அகல்வதற்கே இரங்கி *
அணிகுருகூர்ச் சடகோபன் மாறன் **
அவனி உண்டுமிழ்ந்தவன் மேல் உரைத்த *
ஆயிரத்துள் இவை பத்தும் கொண்டு *
அவனியுள் அலற்றி நின்று உய்ம்மின் தொண்டீர்! *
அச்சொன்ன மாலை நண்ணித் தொழுதே 11

**அடிவரவு:** மல்லிகை புகல் இனி பாவியேன் யாமுடை அவன் ஆருக்கு
புதுமணம் ஊதும் மாலையும் அவனை மாலை

[2] வாளொளி